**தமிழ்த்துறை மன்றச் செயல்பாடுகள்:**

மகாகவி பாரதியாரின் பெயரில் **முண்டாசுக்கவி முத்தமிழ்மன்றம்** இத்தமிழ்த்துறையில் உள்ளது. இம்மன்றத்தின் சார்பில் மாணவிகளின் பன்முகத் திறன்களை வெளிக்கொணரும் வகையில் ஆண்டுதோறும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

- ❖ செப்டம்பர் 10, 2016 அன்று நடைபெற்ற முத்தமிழ்மன்றவிழாவில் சிறப்புவிருந்தினர் **திருமதி. ஓவியா** கலந்துகொண்டார்.
- ❖ 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 பாரதியின் நினைவுதினத்தையொட்டி நாட்டுப்புறவிளையாட்டுப்போட்டியும் முத்தமிழ்மன்றவிழாவும் நடத்தப்பட்டது. இதில் பல்லாங்குழி, கழங்காடுதல், பாண்டி, கயிறுதாண்டுதல், பூதொடுத்தல் ஆகியவை இடம்பெற்றன. இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக ராணிமேரிகல்லூரி தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் **முனைவர். தமிழ்ச்செல்வி** அவர்கள் கலந்துகொண்டார்.
- ❖ 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 பாரதியின் நினைவுதினத்தையொட்டி நடைபெற்ற முத்தமிழ்மன்ற விழாவில் நாட்டுப்புறநடனப்போட்டி நடத்தப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக மரபுக்கலைக்கலைஞர் மற்றும் பயிற்றுநர் **செல்வி.ப.இலட்சுமி** அவர்கள் கலந்துகொண்டார்.
- ❖ கடந்த ஆண்டு மார்ச் மாதம் **உலகத்தாய்மொழிநாள் விழா** தமிழ்த்துறையின் சார்பில் 23.02.2018 அன்று கொண்டாடப்பட்டது. இதற்குச் சிறப்பு விருந்தினராக செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பதிவாளர் **முனைவர் முகிலைஇராசபாண்டியன்** கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.
- ❖ புதியதலைமுறையுடன் இணைந்து **“அச்சம் தவிர்”** எனும் மகளிர் சிறப்பு நிகழ்ச்சி 27.02.2018 அன்று கல்லூரி கலையரங்கில் நடத்தப்பட்டது.
- ❖ **சகோதரி நிவேதிதை 150 ஆண்டுவிழா**வினையொட்டி **ரதயாத்திரை** மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி 19.02.2018 அன்று கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது. இதற்குச் சிறப்பு விருந்தினராக அரசியல்விமர்சகர் மற்றும் பேச்சாளர் **திருமதி வானதிசீனிவாசன்** அவர்கள் கலந்துகொண்டார்.
- ❖ **பாலகங்காதர திலகர் நூற்றாண்டு விழா** தமிழ்த்துறையின் சார்பில் கல்லூாயில் கொண்டாடப்பட்டது.
- ❖ பகவான் மகாவீர் பவுண்டேசன் மற்றும் விவேகானந்த கேந்திரம் ஆகியவற்றுடன் தமிழ்த்துறை இணைந்து மாணவிகளுக்குப் போட்டிகளை நடத்தியது. இவ்வாண்டு 27.08.2018 அன்று பகவான் மகாவீர் பவுண்டேசனுடன் இணைந்து, “பகவான் மகாவீரரின் போதனைகளும் தத்துவங்களும்” எனும் தலைப்பில் தமிழ்த்துறை நடத்திய கட்டுரைப்போட்டியில் 140 மாணவிகள் கலந்துகொண்டு சான்றிதழ் பெற்றனர்.
- ❖ **உலகப்புத்தகதினம்** கடந்த **ஏப்ரல் 23, 2018** அன்று தமிழ்த்துறை சார்பில் கொண்டாடப்பட்டது. இதில் கல்லூரி இயக்குநர் **திரு. கே.பி. அருண்** மற்றும் முதல்வர் **ர. ரேவதி** ஆகியோர் மாணவிகளுக்குப் புத்தகங்களை வழங்கினர்.

- 2014-15 மற்றும் 2017-18 ஆம் ஆண்டுகளில் **சென்னை இலக்கியக்கழகத்**துடன் இணைந்து பேச்சுப்போட்டி, தமிழறிஞர்களைக் கண்டறிதல் போட்டி, விவாதஅரங்கம், விழிப்புணர்வுப்பேரணி ஆகியவை நடத்தப்பட்டன.
- **பேச்சாற்றல் மற்றும் கலந்துரையாடல் மன்றத்தின்** சார்பில் புத்தக விமர்சனப் போட்டி நடத்தப்பட்டு மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. "சமூகவலைதளங்கள் மற்றும் ஊடகங்கள் இளைஞர்களின் முன்னேற்றத்திற்குத் துணையே! தடையே!" எனும் தலைப்பில் 29.08.2018 அன்று நடைபெற்ற பட்டிமன்றத்தில் 12 மாணவிகள் பங்குபெற்று விவாதம் புரிந்தனர். இதற்கு நடுவராக **டி.ஜி.வைணவக்கல்லூரிப் பேராசிரியர் முனைவர் செல்லப்பிள்ளை** அவர்கள் கலந்துகொண்டு நகைச்சுவையாகவும் கருத்தாழமாகவும் பேசி மாணவிகளை உற்சாகப்படுத்தினார்.
- **நாடக மன்றத்தின்** சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கட்டியங்காரி நாடக்குழுத் தலைவர் **ஸ்ரீஜித்** சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மாணவிகளுக்கு நடிப்புப்பயிற்சி அளித்தார்.
- **இதழியல் மன்றத்தின்** சார்பில் **மக்கள்குரல் பத்திரிக்கை** அலுவலகத்திற்கு மாணவிகள் அழைத்துச்செல்லப்பட்டு இதழ்சார் பயிற்சியும் அனுபவமும் பெற்றனர்.
- **சுற்றுலா மன்றத்தின்** சார்பில் சென்னை தரமணியில் உள்ள **உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தின்** பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக் கூடத்திற்கு மாணவிகள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

**இக்கல்வியாண்டில் நடத்தவிருக்கும் துறைச் செயல்பாடுகள் - 2018-19**

- டிசம்பர் 3 - தமிழ்த்துறை மலாயாப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் **பன்னாட்டுக் கருத்தரங்கம்** - தலைப்பு - "புத்திலக்கியங்களில் பெண்" .